DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT, NAMAKKAL.

**CASE NO.STC.No. 303/2025**

**PW–1**

| | | |
|---|---|---|
| Name | : | கார்த்திக் |
| Father's Name | : | மாணிக்கம் |
| Village | : | கல்யாணி |
| Taluk | : | நாமக்கல் |
| Calling | : | சுயதொழில் |
| Age | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the

**Date: 31.08.2026**

**விசாரணை தொடங்கும் நேரம்: காலை 11.45 மணி**

**(எதிரி ஆஜரில்லை, எதிரி தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை:**

1) நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். நான் 4/129, பாப்பாங்காடு, மேற்குகாட்டுர், கல்யாணி கிராமம், நாமக்கல் வட்டம் மற்றும் மாவட்டம் என்ற விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். மேற்படி நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன்.

2) கடந்த 31.12.2024 ஆம் தேதியிட்ட காசோலை எண்.044935 அசல் **ம.சா.ஆ.1,** கடந்த 01.01.2025 ஆம் தேதியிட்ட மேற்படி காசோலை திருப்பப்பட்டதற்கான வங்கி மெமோ அசல் **ம.சா.ஆ.2,** கடந்த 30.01.2025 ஆம் தேதி புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய பதிவு அறிவிப்பு அலுவலக நகல் **ம.சா.ஆ.3,** கடந்த 31.01.2025 ஆம் தேதி மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டமைக்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **ம.சா.ஆ.4,** எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு பெற்றுக் கொண்டதற்கான கணிணிபதிவிறக்க நகல் **ம.சா.ஆ.5,** புகார்தாரரின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது). **ம.சா.ஆ.6** ஆகும் மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். எதிரிக்கு தக்க தண்டனையும், எனக்கு இழப்பீடும் வழங்க பிரார்த்திக்கிறேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எதிரி தரப்பின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை: இல்லை**

**விசாரணை முடியும் நேரம்: காலை 11.55 மணி**